புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

**மேலாண்மை பொன்னுசாமி சிறுகதைகளில் 'தன்னிலை'**

**கட்டுரையாளர்**
**முனைவர் ஆ.முத்தையன்**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை (பி-II),*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் – 635601.*

*இன்று நாம் வாழும் உலகமயமாக்கல் சூழலில் நமக்காக வாழ்கிறோமா? என்றால் மிகப்பெரிய கேள்வியே மிஞ்சும். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், விளம்பரமயமாக்கல் என்கிற சொற்களெல்லாம் மிகப்பெரிய அளவிலான உடைப்புகளைச் செய்திருக்கிறது என்று பலரும் கருதிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் யதார்த்த படைப்புகள் என்று சொல்லப்படுகிற படைப்புகளைப் பார்க்கும்போது அவையெல்லாம் ஒரு பொது ஒழுங்கிற்குள் நின்று செயல்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள், விளிம்புநிலையில் உள்ளோர் முதலானவர்களைப் பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் உலகமயமாக்கல் சூழல் காரணமாக அமைந்திருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டாலும் அவை மக்களை வெறும் நுகர்வோர்களாக மட்டுமே அணுகி அவரவர்களுக்குத் தேவையானதைப் பிரித்துக்கொடுக்க முயன்றதே ஒழிய, சமூக வெளியில் (பொது ஒழுங்கில்) எந்தவிதமான மாறுதல்களையும் ஏற்படுத்தவில்லை. சான்றாக, யதார்த்த படைப்புகளாக அறியப்படுகின்ற பலருடைய படைப்புகளின் பொதுத்தன்மைகளை ஆராயும்போது இது புரியும். அதில் வரும் கதாபாத்திரங்கள் பண்புகள், விருப்பங்கள், ஏக்கங்கள், உணர்வுகள் மொழியால் கட்டப்பட்டிருந்தாலும் அக்கதாபாத்திரங்களுக்கான சுயம் (தன்னிலைகள்)*

என்பது பொது ஒழுங்கு அல்லது சமூக ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளன (பொது ஒழுங்கைத் தாண்டிய தன்னிலைகள் வெளிப்படுவதென்பது அரிதான ஒன்று). அப்படிப்பட்ட தன்னிலைகளைச் சில சிறுகதைகளைக் கொண்டு இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

சுயம் பற்றிக் கூறும் லக்கான், ''மே, 1968 நிகழ்ச்சிகளின்போது மக்களது கவனம் பெருமளவு சுய வெளிப்பாடு, ஆசை, பாலியல்தன்மை ஆகிய பிரச்சனைகளில் சென்றது. சமூகத்தினாலும் மொழியினாலும் கட்டமைக்கப்பட்டதுதான் 'சுயம்' என்பது லக்கானுடைய கொள்கை. சமூகமும் தனிமனிதனும் பற்றிப் புதிய நோக்கில் சிந்திப்பதற்கான வழியை அது உருவாக்கித் தந்தது. லக்கானுக்கு சுயம்வேறு, சமூகம்வேறு அன்று. மொழியை ஏற்றுக் கொள்ளும்போது மனிதர்கள் சமூகத்தின் ஒரு பகுதியாகிறார்கள். நம்மை தன்னிலைகளாக உருவமைப்பது மொழிதான். ஆகவே மனிதன் வேறு, சமூகம்வேறு என்று பிரித்துப் பார்க்கத் தேவையில்லை. சமூகம் தனிமனிதனுள் குடிகொள்கிறது.'' (பூரணச்சந்திரன்,க., லக்கானும் உளப்பகுப்பாய்வும், 2014) என்கிறார்.

''உலகு பற்றிய, பிறர் பற்றிய, சுயம் பற்றிய அறிவுகள் யாவுமே மொழியினால்தான் உருவாகின்றன. ஒரு தனித்த மனிதனாகத் தன்னை உணர்ந்து பார்ப்பதற்கு மொழியின் துணை வேண்டும்.

நீ-நான் என்னும் இரட்டை நிலையில் உருவாகும் மொழித்தன்மைதான் ஒருவனது தன்னிலையை வடிவமைக்கிறது. அதேசமயம் மொழி என்பது ஒரு சமூகத்தினுடையதாகவும் கலாச்சாரத்தினுடையதாகவும் இருக்கிறது. தடைகள், சட்டங்கள் கொண்டதாகவும் இருக்கிறது. சற்றும் அறியாமலே குழந்தை மொழியினால் உருவாக்கப்படுகிறது. மொழியின் சுவடுகள் அதன்மீது அழியாமல் பதிக்கப்படுகின்றன.'' (மேலது.,) என்றும்

''தான் (ego) என்பதை சுயத்துடன் (self) ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது பொதுவான மாயையும் லக்கான் தமது படைப்புகளில் கடிந்துரைக்கிறார். 'நான் சிந்திக்கிறேன், ஆகவே நான் இருக்கிறேன்' என்பதற்கு பதிலாக லக்கான், நான் இல்லாதவிடத்துச் சிந்திக்கிறேன். நான் சிந்திக்காதவிடத்தில் நான் இருக்கிறேன் (I think where I am not, I am where I do not think) அல்லது நான் எங்கே இருக்கிறேன் என்று சொல்லமுடியுதோ அங்கே சிந்திக்கிறேன் (I think where I cannot say I am) என்கிறார்.'' (மேலது.,) என்பதும் குறிப்பிடத்தக்கவை.

க.பூரணச்சந்திரன் தன்னுடைய கட்டுரையில் லக்கானின் தன்னிலைகளைப் பற்றிய பார்வைகளை ''ஒரு தனித்த சுயம் என்பது இல்லை என்பதை லக்கான் தொடர்ந்து வலியுறுத்துகிறார். நமக்கு நிலையான இயல்புகள் இல்லை என்பதையும் வலியுறுத்துகிறார்.

*சார்த்தர் தமது 'இருப்பும் இன்மையும்' நூலில் வற்புறுத்தும் கருத்தும் இதுதான்'' (மேலது.,) என்று முன்வைக்கிறார். இக்கருத்துகளுக்கு வலுச்சேர்க்கும் விதமாக மேலாண்மை பொன்னுசாமியின் 'மின்சாரப்பூ' என்னும் சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களைச் சுட்டலாம். இங்கு ஒருவரின் சுயம் என்பது சமூகச் சிந்தனையாக வெளிப்படுவதையும் மொழியாகக் கட்டுப்பட்டுள்ளதையும் காணலாம். அவ்வாறு பார்க்கும்போது கதாபாத்திரங்களுக்கென்ற தனித்த சுயம் என்பது இல்லை என்று புரியும். தன்னிலைகள் அனைத்தும் பொது ஒழுங்கு அல்லது சமூக ஒழுங்கால் விழுங்கப்பட்டிருக்கின்றன.*

*'பூநெஞ்சத் தீ' எனும் கதையில் சரசு பெற்ற ஆண்பிள்ளையை நரைத்தத் தலையோடுக் கொஞ்சிக் கொண்டிருந்த விஜயம்மாவை ஊரே கையெடுத்துக் கும்பிட்டது வைராக்கிய மனுஷி என்று! (ப.13) வருவதுதான் கதைக்கான அடிநாதம். ஒரு பெண்ணின் துன்ப வாழ்க்கையை எல்லோரும் போற்றனும் என்பதுதான் நோக்கமாக இருந்திருக்கும். ஆனால், அதற்காக இயற்கையாக எழக்கூடிய உணர்வுகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவளாகக் காட்டப்படுவது அவசியம்தானா? என்பது கேள்வியாக இருக்கிறது.*

*''ச்சீ! தெரியாம செய்ற அசிங்கம், அசிங்கமில்லியா? ஒழுக்கம்கிறது ஊருக்குப் பயந்து காப்பாத்துறதுல்லே. உள்ளேயிருந்து கொழுந்து விட்டெரியுற பண்பு. தீ! ச்சேய்.. நாயே, அதெல்லாம் ஒனக்கு என்ன தெரியப் போகுது? போயிடு வெளியே.. விளக்குமாத்தை எடுக்குறதுகுள்ளே..'' (ப.12) என்று வருகிற இடம் மிக முக்கியம்.*

*இதற்கு நேரெதிராகக் கதையின் தொடக்கத்திலேயே திடகாத்திரமான ஒரு இளைஞன் அவளோடு பாலுறவு கொள்வது போன்ற பாலியல் விருப்பக்கனவு ஒன்று வருகிறது. இக்கனவு ஃபிராய்டு சொல்வதைப்போன்று ஆழ்மனத்தேக்கமாக வந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். கணவனை இழந்த ஒரு பெண்ணின் கனவு என்கிற வகையில் விஜயம்மாவின் அறிமுகமாகவும் வருகிறது. அவ்வாறிருக்க கதையின் இறுதியில் உறவுக்காரர் ஒருவர் அவருடைய விருப்பத்தைத் தெரிவிக்கும்போது மறுப்பது என்பதை அவளுக்குப் பாலுறவில் விருப்பம் இல்லை. அவள் ஒழுக்கத்தைக் கடைபிடிக்கக்கூடியவள்; விரும்பக்கூடியவள் என்று எளிமையாகக் கடந்துபோக இயலுமா என்றால் இல்லை.*

*அவருடைய உறவுக்காரரின் தோற்றம், பண்பு, செயல்பாடுகள் முதலானவை அவள் அறிந்ததே. அதனால் அவளுக்குப் பிடிக்காமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாமே ஒழிய, அவளுக்குப் பாலுறவில் நாட்டமே இல்லை என்று கடந்துபோக இயலாது. பாலியல் விருப்பம் என்பது இயற்கையான ஒரு உணர்வு. பசி என்பது எவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் இயற்கையான ஒன்றாக இருக்கிறதோ அதேபோன்றுதான் காமம்*

என்பதும் இயற்கையான ஒன்று. ஆகையால்தான், அவளுடைய இயற்கையான உணர்வுகளைக் கட்டுப்படுத்திவாழும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளாள் என்கிறோம். இந்தச் சமூகம் கடைப்பிடித்து வைத்திருக்கிற கற்பு நெறியினைக் கடைபிடிப்பதால்தான் விஜயம்மாவை அந்த ஊர்க்காரர்கள் 'வைராக்கிய மனுஷி' என்று சொல்கிறார்கள் என்கிறோம். இங்கு விஜயம்மாளின் தன்னுணர்வு மறைக்கப்பட்டு சமூக உணர்வு மேலோங்க செய்யப்பட்டிருக்கிறது. விஜயம்மாள் X சமூகம் என்பதில் அவளின் தனிப்பட்ட உணர்வுகளை விழுங்கி ஒரு நோய்வயப்பட்ட எண்ணத்தை இக்கதை உருவாக்கிவிட்டிருக்கிறது.

குடும்பம் பற்றிப் பேசும்போது பா.கிஸ்பெர்ட், சமூகவயமாக்கல் மற்றும் சமூகக் கட்டுப்பாடு இரண்டும் முக்கியம் என்கிறார். ''சமூகவயமாக்கல் என்றால் ஒரு செயல்முறை. இதன்வாயிலாகத் தனிமனிதன் குறிப்பாகக் குழந்தை, தனது சமூகத்தின் மதிப்புகளையும் நடத்தைமுறைகளையும் தன்னிச்சையாகக் கற்றுக்கொண்டு சீரணித்துக் கொள்கிறது. ஒரு சமூகப்பிராணி என்பதை அவன் எய்தப் பெறுகின்ற முறை இதுதான். மாறாக, சமூகத்துடன் உடன்பாடின்மை அல்லது விலகல் நிகழும் சாத்தியம் நேரிடும்போது அதற்கெதிராக சமூகத்தின் இயல்புருக்களுடன் ஒத்துச்செல்வதை நிகழச்செய்கின்ற செயல்முறைதான் சமூகக் கட்டுப்பாடு. கட்டுப்பாட்டைவிட சமூகவயமாக்கல் என்பது அதிக இயற்கையானது, பிரக்ஞையின்றியும் தன்னிச்சையாகவும் நிகழ்வது'' (க.பூரணச்சந்திரன் (மொ.ஆ.,), சமூகவியலின் அடிப்படைகள், ப.97) என்கிறார்.

தொடர்ந்து குடும்பம் பற்றிப் பேசும் அவர் ''சமூகசீரமைப்பு, கலாச்சாரம் ஆகியவற்றின் முழுமையிலும் செல்வாக்குச் செலுத்துகிறது... குடும்பம் என்பது உலகளாவியது'' (மேலது., ப.100) என்றும் சமூகம் தனது தேவைகேற்ப உருவாக்கிக் கொண்ட தற்காலிக நிறுவனமே குடும்பம் (மேலது., ப.122) என்பதும் கவனத்திற்குரியது. இந்த விளக்கங்களிலிருந்து பார்க்கும் போதுதான் விஜயம்மாள் சமூவயமாக்கலுக்கு உட்பட்ட ஒரு கதாபாத்திரம் என்பதும் அவளால் சமூகத்தின் வன்முறைகள் விரும்பி ஏற்கச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் விளங்கும்.

எனவேதான், விஜயம்மாள் சமூகம் என்று நினைக்கும்போது அவளின் மனதில் தோன்றும் விருப்ப உணர்வைச் சமூகம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறது. அவள் தன்னுடைய இளம்வயதில் கணவனை இழந்தவள். அதன் காரணமாகவே தனக்கே உண்டான பாலியல் உள்ளிட்ட பல்வேறு விருப்பத்தேர்வினை நிறைவேற்றிக் கொள்ள இடமில்லாமல் மனநோய்வயப்படக்கூடிய சூழலில் சிக்கித் தவிக்கிறாள். அனைத்து உணர்வுகளையும் விருப்பங்களையும் வெளிக்காட்டாதவளாக கட்டுப்படுத்திக் கொள்பவளாக இருக்கிறாள்.

*அதற்குக் காரணம், அவள் ஒரு சமூகவயமாக்கப்பட்ட பிராணியாக இருப்பதே. அதனால் தான் ஒழுக்கம் (கற்பு) பற்றிய மதிப்பீட்டைத் தானே உணர்ந்து ஏற்றிருப்பவளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். சமூகத்தின் ஆதிக்கம் பெண்ணைத் தனிமைப்படுத்தி அவளின் உணர்வுகள்மீது வன்மத்தைச் செலுத்தியிருக்கிறது. அவளின் தியாகத்தை கௌரவப்படுத்தும் விதமாக சமூகம் 'வைராக்கியமனுஷி' என்ற புனிதப் பட்டத்தை வழங்கி அவளின் உள்ளுணர்வைப் புரிந்துகொள்ளாமல் / புரிந்து கொள்ள விடாமல் பாதுக்காத்திருக்கிறது. எனவேதான் தன்னிலை அழிக்கப்பட்டிருக்கக்கூடிய பெண்ணுக்கு வழங்கும் போலியான அங்கீகாரம் என்கிறோம். இதில் விஜயம்மாளுக்கே உண்டான உள்ளுணர்வுகள் யாவும் இன்மைகளாக மறைக்கப்பட்டிருக்கின்றன. குற்றம் என்று மலுங்கடிக்க செய்யப்பட்டிருக்கின்றன. இறுதிவரை தன்னுடைய சுயம் என்பது என்ன என்பதை அறியாத பெண்ணாக, சமூகவயப்பட்டவளாக வாழ்ந்தும் சென்றிருக்கிறாள்.*

*கற்பு எவ்வகையில் சமூக ஒழுங்கிற்கு (பொது ஒழுங்கிற்கு) உட்பட்டதோ அதே அளவிற்கு சாதி என்பதும் அவ்வ சாதிகளின் செயல்பாடுகளும் சமூகத்தின் பொது ஒழுங்கிற்கு உட்பட்டதே. சாதிக்கும் சமூகவயமாக்கல் உண்டு. தன்னிலை ஏற்கும் சாதிகளை சாதிய சமூகம் விலக்கிவைக்கும். தீண்டாமைக்குட்படுத்தும். பல அந்நிய கோட்பாடுகளைக் கற்பித்து பொதுவிலிருந்து விலக்கும்.*

*'சூரியத்தேர்' என்னும் கதையில் ''நேத்து மொளைச்ச குட்டி நாய்க நீங்க. என்னடா தெரியும் உங்களுக்கு? கோவில் கொளம் திருவிழான்னா.. ஊர்லே தேர்தல் கீர்தல் வர்றப்ப.. அரமனைக்காரவுக ஆதரவும் அரவணைப்பும் நமக்குத் தேவைப்படுதுல்லே? அரமனைச் சீமானோட அருமை என்னடா தெரியும் ஒங்களுக்கு? பேசாமக் கெடங்கடா. வழமைபோல அரமனைக் காரவுகளுக்குத்தான் முதல் மரியாதை. அவுக வேண்டாம்னு சொல்லிட்டாத்தனா கொளுஞ்சி கொழைக் கட்டுக வேற ஆளுகளுக்கு 'கம்மு'ன்னு வாங்கலே.. (ப.57) என்று ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருக்கிற மக்களின் ஆதரவு அதிகார மற்றும் சாதிய சமூகத்திற்குக் கிடைப்பதைச் சான்று காட்டலாம்.*

*ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகார, சாதிய சமூகம் ஆதரவு தருகிறதா? என்பதே நம்முடைய கேள்வி. ''அறுத்த அறுப்பு, பட்டபாடுகள், கொட்டிய உழைப்பு, 'உன்னோட வேர்வைக்கு வெலை சொல்ற தகுதிகூட ஒனக்குக் கிடையாது' என்று செருப்பால் அடித்த மாதிரி இழிவுப்படுத்திவிட்டார்கள். மனசு கிடந்து தகிக்கிறது. 'நீயொரு மனுசப்பயலே கிடையாது. போடா' என்று ஆதிக்கக் காலால் ஏற்பட்ட வலி.*

*வாயில் மலத்தைத் திணித்த மாதிரி.. மலத்தைக் கரைத்து மூஞ்சியில் ஊற்றின மாதிரி.. பாலையனுக்குள் ஒரு கொதிப்பு.. அய்யன் ராமையன் முன் தலைகுனிந்து நின்றான். (ப.69)*

என்பது அதிகாரச் சமூகத்தின் வன்மத்தைப் புரிந்து கொண்டவர்களாகவே ஒடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது.

இங்கு ஒடுக்கப்பட்ட சமூகம் *X* சாதிய சமூகம் என்கிற இருமை எதிர்வு மனநிலை வெளிப்பட்டு நிற்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகம் விலைவிற்பதற்குக்கூட தகுதியில்லாததாக இருக்கிறது. உழைப்புச் சுரண்டலை தாமாக மனம் உவந்து ஏற்றுக்கொள்கிற அல்லது ஆதரிக்க வைத்திருக்கிற, மற்றவர்களை வணங்கவும், செய்த உதவிக்கு தங்களை அடிமையாக்கிக்கொள்கிற சமூகமாகவும் வைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு நேரெதிராக வன்மம் நிறைந்ததாக, அதிகாரம் செலுத்துகிற சாதிய சமூகம் இருக்கிறது.

கதையின் போக்கு ஒடுக்கப்பட்டவர்களிடம் மட்டுமே கண்ணீரையும் மனமாற்றத்தையும் உண்டாக்கிச் செல்கிறதே ஒழிய அதற்கு எதிரான சாதியச் சமூகத்திடம் எந்த வகையான மாற்றத்தினையும் உருவாக்கவில்லை. தன்னுடைய செயலை உணர்ந்ததாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவுமில்லை. குற்றவுணர்வில்லாத அதிகார, சாதியச் சமூகமாகவே இருக்கிறது. ஆனால், கதைசொல்லி ஒடுக்கப்பட்ட மக்களிடத்திலேயே குற்றவுணர்வை உண்டாக்கிச் செல்கிறது. இந்தக் குறைபாடு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவான குரலை உருவாக்காமல் பரிதாபக் (அனுதாபக்)குரலை மட்டுமே உண்டாக்கிச் செல்கிறது. கதைசொல்லியின் மொழி அதற்கு மட்டுமே இடம் தருவதாக அமைகிறது. இது ஒடுக்கப்பட்டவர்களுக்கான விடுதலை குரலாக மாற்றுக்குரல்களை உருவாக்குமா என்றால் வாய்ப்புகள் குறைவுதான். நாட்டின் வழமை அவ்வாறிருக்கிறது நாம் என்ன செய்யமுடியும் என்கிற அவலக்குரலை மட்டுமே உருவாக்கும். ஒடுக்கப்பட்டவர்களுக்கான தன்னிலை அழிக்கப்பட்டு அதிகார சாதிய சமூகத்திற்கான பொது ஒழுங்கோடு வாழ்வதற்கான அச்சுறுத்தலை முன்வைக்கிறது. இது ஒரு சமூகவயமாக்கலின் விளைவு.

இதற்கு மேலும் வலுவூட்டும் விதமாக, மின்சாரப்பூ என்னும் சிறுகதையில் மனநிலை பிறழ்ந்து போகக்கூடிய கதாபாத்திரமாக செந்தட்டி இருப்பதைச் சுட்டலாம்.

கதைசொல்லியானது கொலை செயலைச் செய்த ஆதிக்க சாதியினரிடம் உண்டாகியிருக்க வேண்டிய குற்றவுணர்வினை ஒடுக்கப்பட்ட ஒருவரிடம் உருவாக்கி மடைமாற்றம் செய்கிறது. மீண்டும் தண்டனையை ஒடுக்கப்பட்டவரிடத்தில் உண்டாக்குவதென்பது சாதிய சமூகத்திற்கு ஆதரவான நிலைபாட்டையே தருவதாக அமையும். ஏற்கனவே சாதிய வன்மத்தால் இயற்கையான 'நான்' என்னும் தன்னிலையை அழித்துக்கொண்டிருக்கிற ஒருவனை மேலும் தண்டித்து அவனை இல்லமலாக்குவது என்பது பழைய தட்டையான கதைசொல்லல் முறையாகவே இருக்கிறது. அது சாதிய சமூகத்திற்கு ஆதரவான நிலைபாட்டையே உருவாக்கும் என்பதும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

*‘‘அவரு மகனும் யோகக்காரன் தானப்பா. மாடத்தியை சினையாக்கிக் கொன்னுட்டு.. மமதையோட அலையுறான்லே?’’ (ப.206)* என்பதும் வீரபாண்டி மரணத்திற்கு நீதி கேட்க வேண்டாமா என்பதற்கு அவனுடைய குடும்பத்தார், *‘‘அவரு பரம்பரை சம்சாரி. பெரிய பணக்காரரு. ஏகப்பட்ட நெலபுலன். எங்க குடும்பம் மூணு தலைமுறையா அவரோட பண்ணியிலே அடிமையா ஒழைச்சிருக்கோம். வேர்வையை ஓசியா சிந்தியிருக்கோம். வீரபாண்டிதான்.. அடிமையா இல்லாம... சுய தொழில்லே கால் ஊணுனான். அது பொறுக்கலே. பொசிக்கிட்டாக. போகட்டும். நன்றியில்லாத அவுகளை கடவுளு கேக்கட்டும். தண்டிக்கட்டும். போலீசுக்கு போனா... நமக்கு போன புள்ளே... திரும்பியா வந்துருவான்? ஆக வேண்டியதைக் கவனிங்க..! சொல்லி முடித்தவுடன் குமுறி வெடித்து கதறுகிற அவரது சோகம்’’ (ப.205-206).*

இந்த உரையாடல்கள் சாதிய வன்மம் நிறைந்த சமூகத்தில் தாக்குப்பிடிக்க இயலாதநிலையில் ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்துகின்றன. குற்றம் யார் செய்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களே மனப்பிறழ்வு அடைகிற சூழலை சாதிய சமூகம் உருவாக்கிவிட்டு எந்தவித குற்ற உணர்வும் இல்லாமல் கடந்து செல்கிறது.

*‘‘சாதி என்பது பொதுவான ஒரு பெயரைப் பெற்ற ஓர் அகமணக்குழு அல்லது அகமணக் குழுக்களின் தொகுதி. பாரம்பரியத்தினால் அதன் உறுப்பினர் ஆகும் தன்மை கிடைக்கிறது. தன் உறுப்பினர்கள்மீது சமூக உறவுகளில் சில கட்டுப்பாடுகளை அது விதிக்கிறது. மரபுசார்ந்த பொது வேலையைச் செய்கிறது; அல்லது பொதுமூலத்திலிருந்து வந்ததாகச் சொல்கிறது; ஒருங்கிசைந்த ஒற்றைச் சமுதாயமாகப் பொதுவாகக் கருதப்படுகிறது.’’ (பூரணச்சந்திரன்,க. (மொ.ஆ.), சமூகவியலின் அடிப்படைகள், ப.454)* என்பதும்

*‘‘இந்தியாவிலுள்ள சாதியமைப்பின் புனிதத் தன்மை அது தெய்வீக ஏற்பாட்டினால் நிறுவப்பட்டது என்ற நம்பிக்கையால் எழுந்தது. ஆகவே, ஒவ்வொருவனும் தன்சாதி தர்மத்தின்படி தன் கடமைகளை ஆற்றியாக வேண்டும். இதுதான் புகழ்பெற்ற பகவத்கீதையில் விதிக்கப்பட்ட சித்தாந்தம்.’’ (மேலது., ப.462)* என்பதும் சாதிப் பெயரைச் சொல்லி ஒடுக்கபட்ட மக்களின் தன்னிலைகளை கட்டுப்படுத்துகிற வேலையினைச் செய்கிறது என்பது விளங்கும். இது நாட்டினுடைய முழுமையான வளர்ச்சிக்கு தடைகல்லாக இருக்கிறது என்பதும் அறிந்ததே.

மேலும், வீரபாண்டி குடும்பத்தாரின் பண்ணையடிமைநிலை என்பது சற்றே கடுமை குறைந்த அடிமைத்தனம் என்று கருதலாமே ஒழிய முழுமையான விடுதலையாக கருத

*இயலாது. முழுமையான விடுதலையாக கருத இடமில்லாதபோது அது முழுமையான சுயத்தை வெளிப்படுத்த உதவுமா என்றால் அதற்கு இடமில்லை.*

*மேற்கண்ட கதைகளில் தனிமனிதன் X சமூகம், விஜயம்மாள் X சமூகம், செந்தட்டி X சாதிய சமூகம், தலித் சமூகம் X சாதிய சமூகம், அடிமை சமூகம் X ஆதிக்கச் சமூகம் ஆகிய பல்வேறு இருமை எதிர்வுகள் இடம்பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒன்றிற்கொன்று முரண்பட்டு நிற்கின்றன. இக்கதைகளில் வரும் இன்மைகளும் இடைவெளிகளும் பல பொருள்களை வாசகர்களிடையே உண்டாக்குகிறது. அது நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் உருவாக்கிச் செல்கிறது. எதிர்மறையாக ஒடுக்கப்பட்டவர்களின்மீது ஆதரவு உணர்வினை உண்டாக்கிச் செல்வதாகப் பலராலும் சொல்லப்பட்டாலும் உண்மையில் இவ்வுணர்வு ஆதிக்க மனநிலைக்கு ஆதரவாகவே இருக்கிறது. இதையெல்லாம் பொறுத்துக்கொண்டுதான் வாழவேண்டும் என்று அச்சுறுத்துவதாகவே வாசிக்க இடம் தருகிறது. அதற்காகத்தான் கதைசொல்லி ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் சமூகவயமாக்கல் என்கிற அளவில் 'தான்' என்பதை உணராமலாக்குவதோடு சமூகத்தோடு எந்த வகையிலும் முரண்படாதவாறு பார்த்துக்கொள்கிறது. கதாபாத்திரங்களைச் சமூகவயமாக்குகிறது. சமூகவயமாக்கலுக்குக் கட்டுப்படாதவர்களுக்குத் தண்டனைகளையும் காட்டி அச்சுறுத்தலின் வாயிலாகச் சமூகவயமாக்குகிறது.*

*தண்டனைகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டவர்களுக்கே என்பதும் ஆதிக்கவாதிகள் (சாதியவாதிகள்) தவறை உணராமலேயே இருக்கின்றனர் என்பதும் மோசமான உணர்வுநிலைக்குச் சான்றுகளாகும். இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவான ஒரு உணர்வை வாசகர் மத்தியில் உருவாக்குவதாகத் தோன்றினாலும் அவை சமத்துவத்தை உருவாக்காது. ஆண்டான் X அடிமை எனும் உணர்வை மேலும் வலுப்படுத்தும் என்றும் தோன்றுகிறது.*

**துணைநின்றவை**


1. *மேலாண்மை பொன்னுசாமி, மின்சாரப்பூ, கங்கை புத்தக நிலையம், 8ம்பதிப்பு 2016.*
2. *க.பூரணச்சந்திரன்,. (மொ.ஆ), சமூகவியலின் அடிப்படை, NTM, CIIL, மைசூர், 2016.*
3. *க.பூரணச்சந்திரன், லக்கானும் உளப்பகுப்பாய்வும், டிசம்.2014. (http://www.poornachandran.com)*
4. *தமிழவன், அமைப்பியலும் அதன்பிறகும், அடையாளம்.*
5. *தமிழவன், மொழிதல்கோட்பாடும் தமிழும், மேலும்வெளியீடு.*